03.03.16

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### எச்சரிக்கிறது வேளாண் பல்கலை ஆய்வு மையம் தகிக்கும் வெயில்! இந்தாண்டு கோடை மழை குறைய வாய்ப்பு



திருப்பூர்: "குளிர்கால மழை, நடப்பாண்டு ஏமாற்றியுள்ள நிலையில், கோடை மழை சராசரிக்கும் குறைவாக பெய்யும்; வெயில் மற்றும் காற்றின் தாக்கம் அதிகரிக்கும்' என, வேளாண் பல்கலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.திருப்பூர் மாவட்டத்தின், சராசரி மழை அளவான, 602.54 மி.மீ., என்பதை தாண்டி, கடந்தாண்டு, 866.69 மி.மீ., பெய்தது. நடப்பாண்டு மழை ஏமாற்றி வருகிறது. குளிர்காலமான, ஜன., - பிப்., மாதங்களில், சராசரியாக மழை, 9.02 மி.மீ., பெய்ய வேண்டும்; அவ்வாறு பெய்யவில்லை. கோடை காலத்திலும் மழை குறையும் என, வேளாண் பல்கலை காலநிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.மார்ச் முதல் ஏப்., வரையிலான கோடை கால மழையளவு சராசரி, 124.20 மி.மீ.,

இந்தாண்டு, 80 முதல், 100 மி.மீ., வரை மட்டுமே, மழை பெய்ய வாய்ப்புள்ளதாக, ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்தாண்டு, கோடை காலமே தெரியாத அளவுக்கு, தொடர்ந்து மழை பெய்து, சராசரியை விஞ்சி, 350 மி.மீ.,யாக பதிவானது. இந்தாண்டு, முன்னதாகவே கோடையின் தாக்கம் அதிகரித்துள்ளது; அத்துடன், மழை யும் குறையும் என்ற அறிவிப்பு, மக்களை கவலை அடையச் செய்துள்ளது. இயல்பை விட வெயிலின் தாக்கம் அதிகரிப்பதோடு, காற்றின் வேகமும் கூடுதலாக இருக்கும் என, அறிவிக்கப்பட்டுள்ளது. வேளாண் பல்கலை காலநிலை ஆராய்ச்சி மைய தலைவர் பன்னீர் செல்வம் கூறியதாவது: திருப்பூர் மாவட்டத்தில், இந்தாண்டு கோடை மழை, 80 முதல், 100 மி.மீ., வரை எதிர்பார்க்கலாம். மார்ச் முதல் வாரம் மழை இருக்காது; இரண்டாவது வாரத்தில் பெய்யக்கூடும். இயல்பை விட அதிகரித்து, வெயில் இந்தாண்டு கடுமையாக இருக்கும்; பகலில், 33 முதல், 34 டிகிரி சென்டி கிரேடு வரை வெயில் பதிவாகும். இரவு நேரத்தில், 23 முதல், 24 டிகிரி சென்டி கிரேடு வெப்ப நிலை இருக்கும். காற்றின் வேகமும் மணிக்கு, நான்கு கி.மீ., வேகம் என்பதற்கு பதிலாக, கோடையின் தாக்கத்தால், மணிக்கு, ஏழு முதல், எட்டு கி.மீ., தூரம் என்ற அளவில் இருக்கும். கால்நடைகளுக்கு நீர் அதிகம் தேவைப்படும்; சூடான நீர் வைக்காமல், குளிர்ந்த நீர் கொடுக்க வேண்டும். காற்றின் வேகத்தால், வாழைக்கு முட்டுக்கொடுக்க வேண்டும். கோடை மழை பெய்யத் துவங்கியதும், <விவசாயிகள் உழவுக்கு தயாராக வேண்டும். கடந்தாண்டு நல்ல மழை பெய்துள்ளதால், தற்போது கடும் வறட்சி ஏற்படாது; விவசாயத்துக்கு பாதிப்பு உண்டாகாது. இவ்வாறு, அவர் கூறினார்.

## பெரிய்ய... தக்காளி எடை 420 கிராம்



அய்யலூர் அருகே களத்துாரில் விளைந்த ஒரு தக்காளி பழம் 420 கிராம் எடையுடன் பெரிதாக இருந்ததால் பலரும் வியந்தனர். வடமதுரை ஒன்றியம் சுக்காம்பட்டி களத்துாரைச் சேர்ந்தவர் தங்கம். இவரது தோட்டத்தில் இருந்து 'ஹை- பிரீட்' ரக தக்காளி பழங்களை பறித்து அய்யலுார் தக்காளி கமிஷன் மார்க்கெட்டிற்கு அனுப்பியிருந்தனர். இவற்றில் ஒரு பழம் மட்டும் 420 கிராம் எடையுடன் பெரிய அளவில் இருந்தது. இதை கவனித்து பெட்டியில் இருந்து எடுத்த கமிஷன் மண்டி உரிமையாளர் சுப்பாநாயக்கர் தனது கடையில் காட்சிக்காக வைத்துள்ளார். அப்பகுதி விவசாயிகளும், வியாபாரிகளும் ஆர்வத்துடன் 'மெகா' அளவு தக்காளியை வியப்புடன் பார்த்து செல்கின்றனர்.

## சணப்பில் கம்பளிப்புழுவா!



சணப்பு பயிரை தாக்கக்கூடிய முக்கியமான பூச்சி கம்பளிப்புழு. இதன் புழுக்கள் இலைகளை கடித்து அதிகளவில் சேதம் விளைவிப்பதோடு காய்களை துளைத்து, விதைகளை உண்டும் சேதப்படுத்துகின்றன. பெண் அந்துப்பூச்சி சிறிய, வெண்ணிற முட்டைகளை தளிர்இலை மற்றும் செடிகளின் குருத்துப் பகுதியில் இடும். முட்டைகளில் இருந்து வெளிவரும் இளம்புழுக்கள், இலைகளை கடித்து உண்ணும். செடிகளின் இளம் வளர்ச்சி பருவத்தில் புழுக்கள் இலைகளை உண்ணும். வளர்ந்த செடிகளில் காய்களை துளைத்து விதைகளை உண்ணும். வளர்ந்த புழுக்கள் பழுப்புநிறத் தலையுடன் தென்படும். புழுக்களின் உடலின் மேற்புறத்திலும் பக்கவாட்டிலும் மஞ்சள்நிற கோடுகளும், பக்கவாட்டில் கருமை, ஆரஞ்சு நிற பட்டைகளும் காணப்படும். பழுப்புநிற நீண்ட ரோமங்களும் காணப்படும். அந்துபூச்சிகள் பகல்வேளையில் பறந்து திரியும். கை வலை கொண்டும் விளக்குப்பொறி வைத்தும் கவர்ந்து அழிக்கலாம். புழுக்களை கையால் சேகரித்து அழிக்கலாம்.

அதிகம் தாக்கப்பட்ட செடிகளை வெட்டி அழிக்கவேண்டும். 5 சதவீத வேப்பங்கொட்டை சாற்றை தெளிக்கலாம். டிரைகோடெர்மா மற்றும் டெலினாமஸ் இனங்கள் முட்டைகளை தாக்கி அழிக்கக்கூடியது. புழுக்களின் திசுக்களை துளைத்துச் செல்லும் மருந்துகளை, தக்கஅளவு பயன்படுத்தி தெளிக்க வேண்டும். பூச்சி, நோய் தாக்காத விதைகளை பயன் படுத்துவதும் அவசியம்.

**-முனைவர் ரா. கோபாலகிருஷ்ணன்,**

**பூச்சியியல் துறை, வேளாண் தொழில்நுட்ப கல்லூரி,**

**குள்ளப்புரம், தேனி**

## தென்னை நல வாரியம் அமைக்க விவசாயிகள் எதிர்பார்ப்பு! தேங்காய் விளைச்சல் அதிகம்; விலை குறைவு



மேலுார் தாலுகா கொட்டாம்பட்டியில் தேங்காய் விளைச்சல் அதிகரித்ததால் விலை குறைந்தது. விவசாயிகள் நலன் கருதி தென்னை நல வாரியம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்ப்புள்ளது. கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 27 ஊராட்சிகளில் 48 ஆயிரம் ஏக்கரில் தென்னை விவசாயம் நடக்கிறது. இங்கு உற்பத்தியாகும் தேங்காய் மகாராஷ்டிரா, குஜராத், டில்லி உட்பட வடமாநிலங்களுக்கு ஏற்றுமதியாகிறது. இந்தாண்டு மழை அதிகம் என்பதால் விளைச்சல் அதிகரித்தது. இதனால் தேங்காய் விலை குறைந்ததால் விவசாயிகள் நஷ்டத்தில் உள்ளனர். வெளிமாநில பகுதிகளில் தேங்காய் வாங்க மறுப்பதால் வியாபாரிகள் விலைக்கு வாங்கிய தேங்காய்கள் கோடவுன்களில் தேங்கியுள்ளது. இதனால் வியாபாரிகளுக்கும் நஷ்டம். அரசு தென்னை நல வாரியம் அமைத்து விலை நிர்ணயிக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

விவசாயி பூபதி:- தென்னை மரங்களில் 40 நாட்களுக்கு ஒரு முறை பராமரிப்பை பொறுத்து தேங்காய் எடுக்கலாம். போர்வெல் தண்ணீர்

பாய்ச்சி, நோய் தாக்குதலில் இருந்து பாதுகாத்து தேங்காயை ரூ.4 க்கு விற்கப்படுகிறது. விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வியாபாரி பாண்டிசெல்வம்:- வட மாநிலங்களில் தேங்காய் வரத்து அதிகம் உள்ளதால் இங்கு விலைக்கு வாங்க மறுக்கின்றனர். கூடுதல் விலைக்கு தேங்காய்களை வாங்கி குறைந்த விலைக்கு விற்பதால் நஷ்டம் ஏற்படுகிறது. விற்பனை இல்லாததால் கோடவுன் களில் தேங்காய் தேங்கி கிடக்கிறது.

## மஞ்சள் சாகுபடி செயல் விளக்க பயிற்சி முகாம்

வாழப்பாடி: வாழப்பாடி அடுத்த, புழுதிக்குட்டை மற்றும் வேப்பிலைப்பட்டி கிராமங்களில், பழங்குடியினர் உள்ளிட்ட விவசாயிகளிடையே, அங்கக வேளாண் முறையை ஊக்கப்படுத்தும் நோக்கில், இயற்கை முறையில் மஞ்சள் சாகுபடி குறித்த செயல் விளக்க பயிற்சி முகாம் நடந்தது. வாழப்பாடி வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் மாலினி, அங்கக வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளித்தார். தோட்டக்கலை அலுவலர் சாகித்யா, தரமான விதை தேர்வு செய்தல், இயற்கை உரம் மற்றும் பூச்சி, பூஞ்சை கொல்லிகள் பயன்பாடு குறித்து விளக்கினார். வாழப்பாடி மக்கள் நல சங்க தலைவர் வெங்கடாஜலம், இயற்கை முறை சாகுபடிக்கு சான்று பெறுதல், இயற்கை விளை பொருட்களை விற்பனை செய்யும் முறை குறித்தும், உதவி வேளாண் அலுவலர் அரங்கநாதன், மண் மாதிரி எடுக்கும் முறை குறித்தும், முரளிக்குமார், திட்டமிடுதல் மற்றும் ஆவணங்கள் தயாரித்தல் குறித்தும் பயிற்சி அளித்தனர்.

## சிறுதானியங்களில் இருந்து மதிப்பு கூட்டுதல் பயிற்சி

பாப்பாரப்பட்டி அறிவியல் நிலையம் சார்பாக, வத்தல்மலை மண்ணாங்குழியில், சிறுதானியங்களில் இருந்து மதிப்புக் கூட்டுதல்

தொடர்பான பயிற்சி முகாம் விவசாயிகளுக்கு நடந்தது. முகாமை, வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சண்முகம் துவங்கி வைத்தார். மலைவாழ் மக்கள் சிறுதானியங்கள் சாகுபடியில், மதிப்புக் கூட்டுதல் தொழில்நுட்பங்களை பின்பற்றி, அதிக லாபம் பெறுவதற்கான வழிமுறைகளை எடுத்துக் கூறினார். மாநில திட்டக்குழு விவசாயத் துறை தலைவர் ஜெகன்மோகன், தர்மபுரி மாவட்டத் திட்டப் பிரிவு இயக்குனர் ஆர்த்தி, திட்ட முதன்மை ஆய்வாளர் வெண்ணிலா ஆகியோர், சிறுதானியச் சத்துக்களை மதிப்புக் கூட்டி விற்பனை செய்வதன் அவசியம் குறித்தும், அதன் தயாரிப்பு, பதப்படுத்துதல், இயந்திரங்களைப் பற்றியும் விரிவாக எடுத்து கூறினர். முகாமில், முன்னோடி விவசாயிகள் சிவக்குமார், சின்னராஜ் உட்பட, 70க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## 300 விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில், 300 விவசாயிகளுக்கு, 2.9 கோடி ரூபாய் மதிப்பில் வேளாண் கருவிகள் வழங்கப்பட உள்ளன.

மாவட்டத்தில் காஞ்சிபுரம், மதுராந்தகம், நந்தனம் ஆகிய இடங்களில், வேளாண் பொறியியல் துறை உப கோட்ட அலுவலகங்கள் செயல்படுகின்றன. வேளாண் பொறியியல் துறை மூலம் விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில், மானிய விலையில், வேளாண் உபகரண கருவிகள் ஆண்டுதோறும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு, ஒவ்வொரு உப கோட்டத்திலும், 200க்கும் மேற்பட்டவர்கள், வேளாண் உபகரணங்கள் கேட்டு, விண்ணப்பம் செய்திருந்தனர். அதன்படி, விசை உழுவை இயந்திரம், டிராக்டர், சுழல் கலப்பை, மினி டிராக்டர், மருந்து தெளிக்கும் கருவி, விதை விதைப்பான் கருவி போன்றவற்றை, 300 விவசாயிகளுக்கு, 2.9 கோடி ரூபாய் மதிப்பில் வழங்கப்படுகிறது. விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில்,

விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் வேளாண் கருவிகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு, பல காரணங்களால் தாமதம் ஆனது. பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு விட்டனர். இன்னும் சில நாட்களில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

- ராமனாதன் , செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை

## அடிவரை வெட்டப்பட்ட வாழை குலை தள்ளியது




திருவண்ணாமலை மாவட்டம், கண்ணமங்கலம் கே.எம்.ஏ. நகரை சேர்ந்தவர் சுதாகர். பள்ளி ஆசிரியர். இவர், தன் வீட்டின் சுற்றுச்சுவரை ஒட்டி வாழை மரங்களை வளர்த்து வருகிறார். நான்கு வாழை மரங்கள் ஒன்றையொன்று உரசியபடி பெரிதாக வளர்ந்துள்ளன. அவற்றில், ஒருசில வாழை மரங்கள் குலை தள்ளும் நிலையில் உள்ளன. இதனால் இடநெருக்கடி காரணமாக, நடுவே இருந்த, ஒரு வாழை மரத்தை மட்டும் சுதாகர் அடிவரை வெட்டி விட்டார். வெட்டப்பட்ட தடிமனான அடிப்பகுதியை, தோண்டி எடுக்காமல் அப்படியே விட்டிருந்தார். இந்நிலையில், தற்போது அந்த அடிப்பகுதியில், திடீரென குலை தள்ளியுள்ளது. அந்த குலையில், 100க்கும் மேற்பட்ட வாழை காய்கள்

உள்ளன. இதையறிந்த அப்பகுதி மக்கள், கூட்டம், கூட்டமாக சுதாகர் வீட்டுக்கு வந்து, வெட்டப்பட்ட வாழை மரம் குலை தள்ளியதை வியப்புடன் பார்த்துவிட்டு செல்கின்றனர்.

## உணவு தயாரிப்பு குறித்து பயிற்சி: பங்கேற்க அழைப்பு

ஈரோடு மாவட்ட சிறு தொழில்கள் சங்கத்தின் (ஈடிசியா) செயற்குழு கூட்டம் நடந்தது. இதில், சங்க தலைவர் பாலசுப்பிரமணியன் பேசியதாவது: மத்திய அரசால் தாக்கல் செய்யப்பட்ட, 2016-17 ம் ஆண்டுக்கான பட்ஜெட் மிகவும் ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. சிறு, குறு தொழில்களுக்கு நிதி நிலை அறிக்கையில் எவ்வித சலுகைகளும் வழங்கப்படவில்லை. டி.எஸ்.பி., மற்றும் ஜி.எஸ்.டி., வரிகள், ஆன்லைனில் வரிகள் செலுத்துதல் தொடர்பான நடைமுறைகள் உட்பட பல்வேறு பயிற்சி ஈடிசியாவில் வழங்கப்படுகிறது. உணவு பொருள் தயாரிப்பு தொழில் தொடர்பாக, ஈடிசியாவில் வரும், 11ம் தேதி கூட்டம் நடக்கிறது. இதில் இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் பங்கேற்கலாம். இவ்வாறு பேசினார்.

## பசுந்தேயிலை கிலோவுக்கு ரூ.16.50 விலை நிர்ணயம்

நீலகிரியில், பசுந்தேயிலைக்கு கிலோவுக்கு, 16.50 ரூபாய் நிர்ணயம் செய்து, தேயிலை வாரியம் உத்தரவிட்டுள்ளது. தேயிலை வாரிய துணை இயக்குனர் (தேயிலை வளர்ச்சி) ஹரிபிரகாஷ் அறிக்கை: நீலகிரியில் சிறு தேயிலை தொழிற்சாலைகள், தங்களிடம் விவசாயிகளால் வழங்கப்படும் பசுந்தேயிலைக்கு வழங்க வேண்டிய குறைந்தபட்ச விலையை, மாதந்தோறும், தேயிலை வாரியம் நிர்ணயம் செய்து வருகிறது. அதன்படி, தேயிலை சந்தை கட்டுப்பாட்டு சட்டம், 2003ன் படி, கடந்த மார்ச் மாத சராசரி விலையாக, கிலோவுக்கு, 16.50 ரூபாய்க்கு குறைவாக வழங்கக் கூடாது. இவ்வாறு, ஹரிபிரகாஷ் கூறியுள்ளார்.

**மண் தரையில் காய வைப்பதால் தரத்தை இழக்கும் மிளகாய் வத்தல்**

முதுகுளத்தூரில் போதிய உலர் களம் இல்லாததால் அறுவடை செய்யும் மிளகாய்களை மண் தரைகளில் கொட்டி காயவைப்பதால் அவற்றின் தரம், நிறம் குறைகிறது. முதுகுளத்தூர் அருகே காக்கூர், கீழத் தூவல், பொன்னக்கனேரி, தேரிரு வேலி, உலையூர், கோடாரேந்தல், ஆதனக் குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் கிட்டதட்ட 3 ஆயிரம் ஏக்கரில் விவ சாயிகள் மிளகாய் சாகுபடி செய் துள்ளனர். இவை தற்போது அறுவடை யாகி வருகிறது. அப்பகுதிகளில் போதிய உலர் களங்கள் இல்லாததால் மிளகாய்களை சாலையோரம் மணல் தரையில் பரப்பி காய வைக்கின்றனர். இதனால் மிளகாய்களின் நிறம், தரம் குறைகிறது. இவற்றை அடிமாட்டு விலைக்கு வியாபாரிகளிடம் விற்பனை செய்யவேண்டிய நிலை விவசாயி களுக்கு ஏற்படுகிறது. இவற்றை தவிர்க்கும் விதமாக வரும் காலங்களில் போதிய உலர் களங்கள் அமைத்து கொடுக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வெங்கலகுறிச்சி விவசாயி குமார் கூறுகையில், "" புதிய மிளகாய் வத்தல் தரத்தை பொறுத்து கிலோ ரூ.120 முதல் ரூ.140 வரை விற்பனையாகிறது. பழைய மிளகாய் வத்தல் கிலோ ரூ. 90 க்கு விற்பனையாகிறது. சோடை வத்தல் கிலோ ரூ.70க்கு விற்பனையாகிறது. பனிக்காலம் என்பதால் மண் தரைகளில் உலர்த்தும் மிளகாய் சோடை வத்தலாக மாறுகிறது. இவை குறைந்த விலைக்கு வியாபாரிகளிடம் விற்பனை செய்வதால் பலத்த வருவாய் இழப்பு ஏற்படுகிறது. நெல் கொள்முதல் செய்வதுபோல் மிளகாய் வத்தலையும் விலை நிர்ணயம் செய்து அரசு கொள்முதல் செய்யவேண்டும்," என்றார்.

**உரம் விலை, கூலி உயர்வால் விவசாயம் பாதிப்பு! ஆட்கள் கிடைக்காமல் தவிப்பு**

உரவிலை, கூலி உயர்வால் வேளாண்மை செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். திண்டுக்கல் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவிற்கு பெய்யவில்லை. இதை நம்பி நெல், கரும்பு, சோளம், தட்டை, சுண்டல், பாசிப்பயிறு, சூரியகாந்தி, கடலை, எள் பயிரிட்ட விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்தித்துள்ளனர்.

பல மாவட்டங்களில் குளங்கள், கண்மாய்களில் நீர்நிலை உயரவில்லை. ஆனால் உரங்களின் விலையோ பல மடங்கு உயர்ந்துள்ளது. மேலும் நூறு நாள் வேலை திட்டத்தால் விவசாய கூலிகளும் கிடைக்கவில்லை. இதனால் வேளாண்மை செய்ய முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர்.

திண்டுக்கல் அக்கரைப்பட்டி விவசாயிகள் சிலர் கூறியதாவது: தற்போது கோடை வெயில் அதிகமாகியுள்ளது. குளங்களில் இருக்கும் தண்ணீரும் குறைந்து வருகிறது. சுண்டல், மல்லி, பருத்தி ஆகியவற்றை விளைவிக்க முடியாமல் திணறுகிறோம். டி.ஏ.பி., உரம் கடந்தாண்டு மூடை ரூ.450க்கு விற்றது. இந்தாண்டு ரூ. 850க்கு கூட்டுறவு சொசைட்டியில் விற்கிறது. வெளி மார்க்கெட்டில் ரூ.980க்கு விற்பனை செய்யப்படுகிறது.

நூறு நாள் வேலை திட்டத்தால் கூலிக்கும் ஆட்கள் கிடைக்காமல் உள்ளனர். விலைவாசி உயர்வால் ரூ.200 கூலி கிடைத்தாலும் பற்றாமல் உள்ளது. விவசாயம் செய்ய 50வயதிற்கு மேற்பட்டவர்களே உள்ளனர். இளைஞர்கள் வருவதில்லை. முன்பெல்லாம் வயலில் உழுவதற்கு ரூ.100 கொடுப்பார்கள். தற்போது ரூ.400 கொடுக்கிறார்கள். இருப்பினும் மாடுகளுக்கு தீவனம் வாங்குவதற்கே போதவில்லை. எனவே விலைவாசியை கட்டுப்படுத்த வேண்டும், என்றனர். ஒட்டன்சத்திரத்தில் புத்தகக் கண்காட்சி ஒட்டன்சத்திரம்: புதுடெல்லி நேஷனல் ஈக் டிரஸ்ட்

மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இணைந்து நடத்தும் தேசிய புத்தகக் காண்காட்சி நேற்று தொடங்கியது. மாவட்ட உரிமையியல் நீதிபதி சந்தான கிருஷ்ணசாமி தலைமை வகித்து கண்காட்சியை திறந்து வைத்தார்.

ஒருங்கிணைந்த வர்த்தகர் சங்க தலைவர் சுப்பிரமணி முன்னிலை வகித்தார். சமூக ஆர்வலர் ராமகிருஷ்ணன் வரவேற்றார். ஸ்ரீகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளர் திருப்பதி விற்பனையை துவக்கி வைக்க, மணி பிராய்லர்ஸ் சேர்மன் வேலுச்சாமி பெற்றார். நியூ செஞ்சுரி மண்டல மேலாளர் கிருஷ்ணமூர்த்தி, மேலாளர் எத்திராஜ், முன்னாள் கவுன்சிலர் ஆறுமுகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, சமூக, அறிவியல், கோலம், ஜோதிடம், சமையல், மருத்துவம், போட்டித் தேர்வு என பலதரப்பட்ட புத்தகங்களும் இடம்பெற்றுள்ளன. ஒட்டன்சத்திரம் பஸ்ஸ்டாண்ட் மேற்கு பகுதியில் உள்ள மணி காம்ப்ளக்சில் தொடர்ந்து 20 நாட்கள் நடைபெறுகிறது.

**நெல் உற்பத்தி குறைவால் விவசாயிகள் கவலை**

பெரியகுளம் தாலுகாவில் முதல்போக நெல் சாகுபடி அறுவடை துவங்கி உ ள்ள நிலையில் கடந்தாண்டை விட நெல் உற்பத்தி 30 முதல் 50 சதவீதம் வரை குறைந்திருப்பதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

பெரியகுளம் வராகநதிநீரை ஆதாரமாக கொண்டு நல்லகப்பன்பட்டி நாரணன்குளம், சில்வார்பட்டி சிறுகுளம், ஜெயமங்கலம் வேட்டுவன்குளம், சிந்துவம்பட்டி ஒட்டக்குளம், பொம்மிநாயக்கன்பட்டி புதுக்குளம், குள்ளப்புரம் பெரியகண்மாய், மருகால்பட்டி, அ.வாடிப்பட்டி சிறுகுளம் கண்மாய்கள் நிரப்பப்படுகிறது. மேலும் அழகர்நாயக்கன்பட்டி,

மேல்மங்கலம் கிராமங்களில் ராஜவாய்க்கால் நீரை ஆதாரமாக வைத்தும் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் முதல் போக நெல் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது அறுவடைப்பணி நடந்து வருகிறது உற்பத்தி குறைவு

கடந்த அக்டோபர்- நவம்பர் மழையையடுத்து நெல் நடவு செய்தனர். தொடர்ந்து மழை பெய்ததால் பயிர்களின் வளர்ச்சி குன்றியது. அப்போது பாதிப்பு தெரியவில்லை. ஆனால் நெல் அறுவடையின் போது கடந்தாண்டைவிட தற்போது 30 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை உற்பத்தி குறைந்துள்ளது. சில்வார்பட்டி விவசாயி மாயன் கூறுகையில், "" முதல்போக நெல் சாகுபடியில் நீர்பிரச்னை ஏற்படவில்லை. தொடர்ந்து மழை பெய்ததால் நெற்பயிர்களில்பாதிப்பு ஏற்பட்டு நெல் உற்பத்தி குறைந்துள்ளது. செலவு செய்த பணத்தைக் கூட எடுக்க முடியவில்லை. மிகவும் வேதனையாக உள்ளது," என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**ரூ.85 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**

அவிநாசியில் ரூ.85 லட்சத்துக்குப் பருத்தி ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 5,100 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தன.

இதில், ஆர்.சி.எச். ரகப் பருத்தி குவிண்டாலுக்கு ரூ.4,200 முதல் ரூ.4,750 வரையிலும், டி.சி. எச் ரகப் பருத்தி குவிண்டாலுக்கு ரூ.5,500 முதல் ரூ.6,375 வரையிலும், மட்ட ரகப் பருத்தி ரூ.1,200 முதல் ரூ.2,000 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.85 லட்சத்துக்குப் பருத்தி ஏலம் நடைபெற்றது.

இதில், பென்னாகரம், கிணத்துக்கடவு, கோபி, நம்பியூர், அன்னூர், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி, புளியம்பட்டி, மேட்டூர், அன்னூர் ஆகிய பகுதிகளிலிருந்து 650 பருத்தி விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 20 பருத்தி வியாபாரிகளும் பங்கேற்றனர்.

**ரூ. 95 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 95 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது. பெருந்துறை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி விவசாயிகள் 3,631 மூட்டைகளில் 1,75,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 53.75-க்கும், அதிகபட்சமாக கிலோ ரூ. 57.05-க்கும் விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 36.70-க்கும், அதிகபட்சமாக ரூ. 50.75-க்கும் விற்பனையானது. இதில், மொத்தம் ரூ. 95 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

**மொடக்குறிச்சி பகுதிகளில் பூண்டு கிலோ ரூ. 50-க்கு விற்பனை**

மொடக்குறிச்சி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒரு கிலோ பூண்டு ரூ. 50-க்கு விற்பனை செய்யப்படுகிறது. மளிகைக் கடைகளில் பூண்டு 1 கிலோ 100 முதல் 120 வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்த நிலையில் மொடக்குறிச்சி, முள்ளாம்பரப்பு, அவல்பூந்துறை உள்ளிட்ட

பகுதிகளில் சரக்கு ஆட்டோவில் வைத்து 1 கிலோ பூண்டு ரூ. 50-க்கு விற்பனை செய்தனர். விலை குறைவாக இருப்பதால் பெண்கள் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர். இதுகுறித்து வியாபாரி சண்முகத்திடம் கேட்டபோது,

கடையில் 1 கிலோ பூண்டு ரூ. 100 முதல் 120 வரை விற்பனை செய்கின்றனர். ஆனால், நாங்கள் தேனி, பெரியகுளம் பகுதி விவசாயத் தோட்டங்களில் இருந்து ஒரு கிலோ பூண்டு 40 ரூபாய்க்கு வாங்கி வருகிறோம், இரண்டு நாள்களில் 1,000 முதல் 1,500 கிலோ வரை விற்பனை செய்துவிடுவதால் செலவு போக ரூ. 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும் என்றனர்

**உழவர் சந்தையில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் விற்பனைக்குத் தடை**

நாமக்கல் உழவர் சந்தையில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் விற்பனைக்குத் தடை விதித்து, வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் ராஜேந்திரன் உத்தரவிட்டார். நாமக்கல் உழவர் சந்தையில் விவசாயிகளுக்கும், குத்தகை விவசாயிகளுக்கும் இடையே காய்கறிகள், பழங்கள் விற்பனை செய்வது தொடர்பாக அடிக்கடி பிரச்னை ஏற்பட்டது. இதையடுத்து, கடந்த வாரம் வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் ராஜேந்திரன் உழவர் சந்தையில் ஆய்வு செய்து, இரு தரப்பினரையும் அழைத்து விசாரணை நடத்தினார். அப்போது, விவசாயிகள் தரப்பில், குத்தகை விவசாயிகள் ஆண்டு முழுவதும் காய்கறிகள், வாழைப் பழங்களைக் கொண்டு வருவதால், உண்மையான விவசாயிகள் பாதிக்கப்படுவதாகக் கூறினர்.இதையடுத்து, குத்தகை விவசாயிகளின் காய்கறி, வாழைத் தோட்டங்களை ஆய்வு செய்த துணை இயக்குநர், இந்த விளைச்சல் காலம் முடியும் வரை உழவர் சந்தைக்கு குத்தகை விவசாயிகள் வரலாம் என்றார். இதற்கிடையே, ஆய்வின் போது, சோளம், கம்பு, ராகி, தினை சத்து மாவு, குதிரைவாலி அரிசி போன்றவற்றை சில விவசாயிகள் வெளியிடங்களில் வாங்கி வந்து

விற்பனை செய்வது தெரிய வந்தது. இவற்றில் கலப்படம், காலாவதி தேதி போன்ற பிரச்னைகள் இருப்பதால், மதிப்புக் கூட்டப்பட்ட இதுபோன்ற பொருள்களை விற்பனை செய்யக் கூடாது என தடைவிதித்தார். மேலும், விவசாயிகள் உற்பத்தி செய்த காய்கறி, பழங்கள் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

விவசாயம் சார்ந்த பொருள்களை விற்பனை செய்யத் தடை விதிக்கக் கூடாது எனவும், மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டும் எனவும், மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களை விற்பனை செய்து வந்த விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

நாமக்கல் மாவட்ட ஆட்சியராக சகாயம் இருந்தபோது, இதே உழவர் சந்தையில் மாலை நேரங்களில் உழவன் உணவகம் என்ற பெயரில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் விற்பனை செய்யப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**பருத்தி பயிருக்கு காப்பீடு செய்யலாம்: ஆட்சியர்**

திருவாரூர் மாவட்டத்தில் சாகுபடி செய்துள்ள நெல் தரிசு பருத்தி பயிருக்கு பயிர்க் காப்பீடு செய்யலாம் என்று மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: நிகழாண்டில் நெல் தரிசில் சாகுபடி செய்துள்ள பருத்திப் பயிரை தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ், பயிர்க் காப்பீடு செய்ய கடன் பெற்ற விவசாயிகள் 31.3.2016 தேதி, கடன் பெறாத விவசாயிகள் 15.3.2016 தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

இதன்மூலம் இயற்கை சீற்ற பாதிப்பு ஏற்படும்போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிருக்கு சேதம் ஏற்படும் பட்சத்தில் இழப்பீடு கிடைக்கும். இத்திட்டத்தின் கீழ் ஆலங்குடி, ஆவூர், வலங்கைமான், திருக்கண்ணமங்கை, திருவிழிமிழலை, குடவாசல், அகரத்திருமாளம், நன்னிலம், பேரளம், கோட்டூர், பாலையூர், தலையாமங்கலம்,

மன்னார்குடி, குளிக்கரை, வடபாதிமங்கலம், கூத்தாநல்லூர், வடுவூர், நீடாமங்கலம் பிர்க்காவில் பயிர் செய்துள்ள நெல் தரிசு பருத்திப் பயிரை காப்பீடு செய்து கொள்ளலாம். கடன் பெற்ற பெரிய, சிறு மற்றும் குறு விவசாயிகளும் கடன் பெறாத பெரிய விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ. 4,149-க்கு இன்சூரன்ஸ் செய்ய, அரசு வழங்கும் 50 சதவீத மானியத் தொகை நீங்கலாக பிரிமியத் தொகை ரூ. 187 செலுத்த வேண்டும்.

கடன் பெறாத சிறு குறு விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ. 4,149 இன்சூரன்ஸ் செய்ய, அரசு வழங்கும் 55 சதவீத மானியத் தொகை நீங்கலாக பிரிமியத் தொகை ரூ. 168 செலுத்த வேண்டும்.

கூடுதலாக ஏக்கருக்கு ரூ. 6,223-க்கு இன்சூரன்ஸ் செய்ய விரும்பும் கடன் பெறாத விவசாயிகள், கூடுதல் பிரிமியமாக ரூ. 560 தங்கள் விருப்பத்தின் பேரில் செலுத்தலாம். பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் சிட்டா, அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்று பெற்று முன்மொழிவு படிவத்துடன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலோ அல்லது சேவைப் பகுதி வணிக வங்கிகளிலோ தங்களின் பிரிமியத் தொகையை செலுத்தலாம். முன்மொழிவு படிவங்களை அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலோ அல்லது வணிக வங்கிகளிலோ பெற்றுக் கொள்ளலாம் என்றார் ஆட்சியர்.

**கோடை வெயிலை சமாளிக்க தயாராகிறது சென்னை சோற்று கற்றாழை 'ஜூஸ்' விற்பனை 'ஜோர்'**



சென்னை,

கோடை வெயிலை சமாளிக்க சென்னை தயாராகி வருகிறது. இதனால் சோற்று கற்றாழை 'ஜூஸ்' உள்ளிட்ட குளிர்ச்சியூட்டும் பானங்கள் விற்பனை ஜோராராக நடந்து வருகிறது. சோற்று கற்றாழை 'ஜூஸ்'

தமிழகத்தில் கோடைகாலம் தொடங்கிவிட்டதை தொடர்ந்து, வெயிலின் உக்கிரத்தை மக்கள் உணர்ந்து வருகின்றனர். இதனால் வெயில் கொடுமையில் இருந்து தப்பிக்க குளிர்ச்சியூட்டும் பானங்கள் மீது தங்கள் பார்வையை மக்கள் திருப்ப தொடங்கிவிட்டனர். அந்தவகையில் உடல் சூட்டை தணிக்கக்கூடியதும், எண்ணற்ற மருத்துவ குணங்களும் அடங்கப்பெற்றதுமான சோற்று கற்றாழை 'ஜூஸ்' விற்பனையும் மும்முரமாக நடந்து வருகிறது. நகரில் பெரும்பாலான இடங்களில், சாலையோரங்களில் புற்றீசல் போல சோற்று கற்றாழை 'ஜூஸ்' கடைகள் முளைக்க தொடங்கி இருக்கின்றன. உடல் சூட்டை தணிப்பதாகவும்,

உடலுக்கு அருமருந்தாகவும் உள்ள கற்றாழை ஜூஸ் ஒரு கப் ரூ.15-க்கு இங்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதுகுறித்து மெரினாவில் உள்ள சோற்று கற்றாழை 'ஜூஸ்' விற்பனையாளர் பரசுராமன் கூறியதாவது:- கண் எரிச்சல்

சோற்று கற்றாழை மடல்களை பிளந்து நுங்கு போல உள்ள சதைப்பகுதியை சிறு, சிறு துண்டுகளாக வெட்டி நல்ல தண்ணீரில் 5 முறை நன்றாக கழுவி விடுவோம். அப்படி செய்வதின் மூலம் கற்றாழையின் கசப்புத்தன்மை குறைந்துவிடும்.

பின்னர் அதை மோர் அல்லது தயிருடன் கலந்து விற்பனை செய்கிறோம். மூலம், பித்தம், வாய்வு, வயிற்றுவலி, வயிற்றுப்புண், கண் எரிச்சல், ரத்த அழுத்தம் உள்ளிட்ட நோய்களுக்கு சிறந்த மருந்தாகும். சர்க்கரை நோயாளிகள் தாராளமாக இதை பருகலாம். பெண்கள் கண்டிப்பாக சாப்பிட வேண்டிய பானமாகும். தினந்தோறும் காலை நடைபயிற்சி மேற்கொள்பவர்கள் ஆர்வத்துடன் கற்றாழை 'ஜூஸ்' குடித்து செல்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

இளநீர்-தர்பூசணி கடைகள் கற்றாழை 'ஜூஸ்' தவிர்த்து பிற குளிர்ச்சியூட்டும் பொருட் களான தர்பூசணி, இளநீர், வெள்ளரிக்காய் வரத்தும் அதிகரித்து இருக்கிறது. சென்னை நகரில் ஆங்காங்கே தர்பூசணி மற்றும் இளநீர் கடைகள் முளைக்க தொடங்கி இருக்கின்றன. பழச்சாறு கடைகளிலும் பகல் நேரத்தில் கூட்டத்தை பார்க்க முடிகிறது.

**தா.பழூர் ஒன்றியத்தில் கோழி கொண்டை பூக்கள் அறுவடை பணி தீவிரம் மகசூல் இழப்பை தடுக்க மானியத்தில் இடுபொருட்கள் வழங்க கோரிக்கை**



தா.பழூர் ஒன்றியத்தில் கோழி கொண்டை பூக்கள் அறுவடை பணி தீவிரமடைந்து உள்ளது.மகசூல் இழப்பை தடுக்க மானியத்தில் இடுபொருட்கள் வழங்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கோழி கொண்டை பூக்கள் அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியத்தில் விவசாயமே பிரதான தொழில் ஆகும். அதன்படி இப்பகுதியில் நெல்,கரும்பு,முருங்கை, கத்திரி, வெண்டை, அவரை, புடலை மற்றும் கீரை வகைகளை பயிரிட்டு வருகின்றனர். பூக்களில் மல்லிகை, சம்பங்கி, துளுக்க சாமந்தி, செவ்வந்தி என பல்வேறு வகை பூக்களை விவசாயிகள் பரவலாக சாகுபடி செய்து வருகின்றனர். கோழி கொண்டை பூக்களை பெருமளவில் பயிரிடுவதில்லை. கடந்த சில ஆண்டுகளாகத்தான் கோழி கொண்டை பூக்களை பயிரிட்டு வருகின்றனர். குறிப்பாக காரைக்குறிச்சி பகுதியில் தற்போது பெருமளவில் பயிரிட்டுள்ளனர். அறுவடைக்கு தயார் 120 நாட்களில் மகசூலை தரும் கோழி கொண்டை பூக்கள் தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளன. இதனால் அறுவடை பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து கோழி கொண்டை பூக்கள் பயிரிட்டுள்ள விவசாயி நீலமேகத்திடம் கேட்டபோது,

இதற்கு முன்னர் நிலக்கடலை, கத்திரி, புடலை, வெண்டை சாகுபடி செய்து வந்தேன். கடந்தாண்டு முதல் கோழி கொண்டை பூக்களை பயிரிட்டு வருகிறேன். ஊக்கமளிக்க வேண்டும்

இப்பூக்கள் ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.60 வரை விலை போகும். தற்போது அறுவடை செய்யப்பட்ட பூக்களை கும்பகோணம், விருத்தாச்சலம் பகுதியில் விற்பனை செய்து வருகிறோம். மேலும் இப்பூச்செடியில் தத்துப்பூச்சி தாக்குதல், சிலந்தி தாக்குதல் அதிகமாக உள்ளது. இதை கட்டுப்படுத்த எங்களுக்கு சிரமமாக உள்ளது. எனவே வேளாண்மை துறையில் மானியத்தில் உரம் உள்ளிட்ட இடுப்பொருட்கள் வழங்கினால் மகசூல் இழப்பை தடுக்க முடியும். வேளாண்மை துறையினர் விவசாயிகளுக்கு அவ்வப்போது ஆலோசனை தந்து ஊக்கமளித்தால் மற்ற விவசாயிகளும் இப்பயிரை பயிரிடுவதற்கு முன்வருவார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**அரியலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் கலெக்டர் சரவணவேல் ராஜ் தொடங்கி வைத்தார்**



அரியலூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாமினை கலெக்டர் சரவணவேல்ராஜ் தொடங்கி வைத்தார். கோமாரி நோய் தடுப்பூசி முகாம் அரியலூர் மாவட்டம் அம்மாகுளம் ஊராட்சியில் கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில் கால்நடைகளுக்கான கோமாரி நோய்(கால் மற்றும்

வாய் நோய்) தடுப்பூசி முகாம் நடைபெற்றது. முகாமை கலெக்டர் சரவணவேல்ராஜ் தொடங்கி வைத்து பார்வையிட்டார். இதையடுத்து கால்நடைகளுக்கு போடப்படும் தடுப்பூசி பணிகளை ஆய்வு செய்தார். பின்னர் இதுகுறித்து மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:- தமிழக அரசால் வழங்கப்படும் கால்நடைகள் மற்றும் விவசாயிகள் வளர்க்கும் கால்நடைகளுக்கு வரும் நோய்களை கண்டறிந்து, சிகிச்சை அளிக்க ஏதுவாக குறிப்பாக கால்நடைகளுக்கு அடிக்கடி வரும் கால் மற்றும் வாய்நோய்களை தடுக்க தமிழக முதல்-அமைச்சர் ஆணை பிறப்பித்து மாநில முழுவதும் முகாம்கள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் அரியலூர் மாவட்டத்தில் 201 கிராமங்களில் 10-வது சுற்று முகாம் தொடங்கப்பட்டுள்ளது. மூன்று மாத வயதுடைய கன்று முதல் சினை, கறவை உள்ளிட்ட அனைத்து பசு, எருமை மற்றும் காளைகளுக்கு (எருது) இத்தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட உள்ளது. ரூ.13½ லட்சம் மதிப்பில் மருந்துகள் இத்திட்டத்திற்காக 1,68,000 டோஸ் தடுப்பு மருந்துகள் ரூ.13 லட்சத்து 44 ஆயிரம் மதிப்பீட்டில் பெறப்பட்டுள்ளது. மேற்படி தடுப்பூசி பணிக்காக வட்டாரத்திற்கு இருகுழுக்கள் வீதம் கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் அடங்கிய 12 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி செயலாளர்கள், கிராம உதவியாளர்கள், ஆவின், புதுவாழ்வு மற்றும் மகளிர் திட்டத்தினருடன் இணைந்து கால்நடைகளுக்கு 100 சதவீத தடுப்பூசி பணி மேற்கொள்வதுடன் தடுப்பூசி பணி அடையாள அட்டை வழங்கி பதிவுகளும் மேற்கொண்டு வருகின்றனர். அம்மாக்குளம் கிராம ஊராட்சியில் 83 குக்கிராமங்களில் உள்ள 258 கால்நடைகளுக்கும் தடுப்பூசி பணி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விடுபட்ட கால்நடைகள் ஏதும் இருப்பின் 22.3.2016 முதல் 31.03.2016 வரை அவற்றிற்கும் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படவுள்ளது. இதனை பொதுமக்கள் மற்றும் விவசாயிகள்

பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். இந்நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் ரவீந்திரன், உதவி கால்நடை மருத்துவ அலுவலர் பாஸ்கரன், உதவி மக் கள் தொடர்பு அலுவலர் (செய்தி) சரவணன், கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாய விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் மத்திய பட்ஜெட்டில் தொலைநோக்குத் திட்டம்**



மதுரை,

மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள தொலை நோக்குத் திட்டம் காரணமாக, விவசாய விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்று வேளாண் உணவுத் தொழில் வர்த்தக சங்கம் பாராட்டு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அதன் தலைவர் ரத்தினவேல் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:– மத்திய பட்ஜெட்

உணவு பதனீட்டு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், இனி ஈடுபட விரும்புபவர்களுக்கும் மத்திய பட்ஜெட்டில் நல்ல செய்திகள் உள்ளன.

இந்தியாவில் உற்பத்தியாகும் வேளாண் உணவுப் பொருட்களையும் தயாரிக்கப்படும் உணவு பதனீட்டு பொருட்களையும் சந்தைப்படுத்துவதற்கு அந்திய நேரடி முதலீட்டை 100 சதவீதம் அனுமதிக்க மத்திய அரசு முடிவு செய்திருப்பது இந்தியாவில் உள்ள உணவு பதனீட்டு தொழில் துறையை வளர்ச்சி அடைய செய்வதோடு, வேளாண் விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும்.

தொலை நோக்கு பார்வையோடு இந்தியாவில் உற்பத்தியாகும் மற்றும் தயாரிக்கப்படும் உணவு பொருட்களை மட்டும் சந்தைப்படுத்துவதற்கு அந்திய நேரடி முதலீட்டை அனுமதித்திருப்பதற்காக, வரவேற்பையும் பாராட்டையும் மத்திய அரசுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். பிரதமர் மோடியின் "மேக் இன் இந்தியா" திட்டம் உணவு பதனீட்டு துறையில் வலுப்பெறும். <u>கலால் வரி குறைப்பு</u>

நம்நாட்டு உணவு பொருட்களை மட்டும் சந்தைப்படுத்துவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அனுமதி அளிக்கப்படுவதால் சிறு மற்றும் நடுத்தர உணவு பதனீட்டு தொழிற்சாலைகளில் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தரமான உணவு பொருட்களை தயாரிக்க முடியும். நல்ல விலையும் கிடைக்கும். விவசாயிகளுக்கும் லாபகரமான விலை கிடைத்து இளைஞர்கள் வேளாண் துறையில் ஈடுபட முன்வருவார்கள். நம் நாட்டில் உள்ள உணவுப் பொருள் வினியோக நிறுவனங்களுக்கு தேவையான நிதி கிடைக்கும். நுகர்வோருக்கு தரமான மதிப்பு கூட்ட பெற்ற உணவுப் பொருட்கள் கிடைக்கும்.

மேலும் உணவு பொருட்களின் சேதாரத்தை தவிர்க்க குளிரூட்டப்பெற்ற போக்குவரத்து தொடர் சங்கிலி ஏற்படுத்தும் வகையில் குளிரூட்டப்பெற்ற கண்டெய்னர்களுக்கான சுங்கத் தீர்வையை 10 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைத்துள்ளதையும், 12.5 சதவீதமாக இருந்த கலால் வரியை 6 சதவீதமாக குறைத்துள்ளதையும் வரவேற்கிறோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**கள்ளந்திரி பகுதியில் ரூ.14 கோடியில் பாசன கால்வாய்கள் சீரமைக்கும் பணி**



கள்ளந்திரி பகுதியில் சேதமடைந்து காணப்பட்ட பெரியாறு–வைகை பாசன கால்வாய்கள் ரூ.14 கோடி நிதியில் சீரமைக்கப்பட்டு வருகிறது.

<u>பாசன கால்வாய்</u>

மதுரையை அடுத்த அழகர்கோவில் சாலையில் உள்ள கள்ளந்திரி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்தவர்கள் பெரியாறு – வைகை பாசன கால்வாயை நம்பியே விவசாயம் செய்து வருகின்றனர். இந்த கால்வாயில் உள்ள 5, 6, 8, 9, 11 ஆகிய கிளை கால்வாய்கள் சத்திரப்பட்டி, மஞ்சம்பட்டி, கள்ளந்திரி, துக்கலபட்டியில் இருந்து சிட்டம்பட்டி வழியாக ஆண்டார் கொட்டாரம் வரை செல்கின்றன. இந்த கால்வாய்களில் கரைகள் அரிக்கப்பட்டும், கால்வாய்களின் சிலாப்புகள் பெயர்ந்தும் காணப்படுகிறது. இதனால் இந்த கால்வாய்களில் வரும் தண்ணீர் விவசாயத்திற்கு பயனின்றி வீணாகிறது. இதனால் பாசன விவசாயிகள் கால்வாய்களை சீரமைக்க வேண்டும் கோரிக்கை விடுத்து வந்தனர். <u>ரூ.14 கோடி :</u> இந்தநிலையில் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கால்வாய்களை சீரமைக்க அரசு ரூ.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. அதன்படி கால்வாய்களை சீர் செய்வதற்கான பூமி பூஜை 9–வது

கிளை கால்வாயில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் செயற்பொறியாளர் பிரபு, உதவி செயற்பொறியாளர் கார்த்திகேயன், என்ஜினீயர்கள் சாலமன் கிறிஸ்துதாஸ், சுப்பிரமணியன், சண்முகநாதன், அன்பரசு, பாசன கோட்டத் தலைவர் அருள்பிரகாஷ், ஒப்பந்தகாரர் பாஸ்கரன், பணி ஆய்வாளர் மாணிக்கவாசகம், உதவியாளர்கள் சேகர், நல்லபிச்சான், மாணிக்கம் மற்றும் பாசன விவசாயிகளும் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து பாசன கால்வாய்களை பராமரிக்கும் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**காஞ்சரம்பேட்டையில் அரசு நெல் கொள்முதல் நிலையம் தொடக்கம்**



அழகர்கோவில்,

காஞ்சரம்பேட்டையில் அரசு நெல் கொள்முதல் நிலையத்தை முல்லைபெரியாறு வைகை பாசன கோட்ட வட்டார தலைவர் தொடங்கி வைத்தார். இதனால் இந்த பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

<u>கொள்முதல் நிலையம்</u> மதுரையை அடுத்த காஞ்சரம்பேட்டையில் தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் சார்பில் நெல் கொள்முதல் நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான விழாவில் முல்லைபெரியாறு வைகை பாசன கோட்ட காஞ்சரம்பேட்டை வட்டார தலைவர் எம்.பி.ஆர்.மலையாண்டி அசோக் தலைமை தாங்கி தொடங்கி

வைத்தார். துணைத்தலைவர் சங்கர்லால், அலுவலர் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விவசாயிகள் மகிழ்ச்சி

இதில் ஏ கிரேடு நெல் சன்ன ரகம் ஊக்கத்தொகையுடன் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1520 வீதம் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரு கிலோ ரூ.15.20 என்று கணக்கிடப்படுகிறது. உருட்டு ரகம் ஊக்கத்தொகையுடன் ஒரு குவிண்டால் ரூ.1460க்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும் இதில் ஒரு கிலோ ரூ.14.60 என்று கணக்கிடப்படுகிறது.

40 கிலோ கொண்ட நெல் மூடைகள் விவசாயிகளிடமிருந்து பெறப்படுகிறது. இந்த பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டதால் காஞ்சரம்பேட்டை மற்றும் அதன் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும் இதனால் பெரும் பயன்பாட்டை பெற உள்ளனர்.

**நீலகிரி மாவட்டத்தில் ரூ.1,555 கோடிக்கு விவசாய கடன் வழங்க இலக்கு நிர்ணயம் கலெக்டர் தகவல்**



ஊட்டி,

நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு 2016–17–ம் நிதியாண்டில் ரூ.1,555 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளதாக மாவட்ட கலெக்டர் சங்கர் தெரிவித்தார்.

திட்ட அறிக்கை வெளியீடு ஊட்டி கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட முன்னோடி வங்கியின் சார்பில் 2016–17–ம் ஆண்டிற்கான கடன் திட்ட அறிக்கை வெளியிடும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில் மாவட்ட கலெக்டர் சங்கர் கலந்து கொண்டு கடன் திட்ட அறிக்கையை வெளியிட்டு பேசியதாவது:– நீலகிரி மாவட்டத்தில் 2016–17–ம் ஆண்டிற்கு மொத்த கடன் இலக்காக ரூ.2 ஆயிரத்து 170 கோடி நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இதில் விவசாய கடனுக்கு ரூ.1,555 கோடியும், சிறு, குறு தொழில் கடன்களுக்கு ரூ.345 கோடியும், இதர முன்னுரிமை கடன்களுக்கு ரூ.270 கோடியும் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

வாழ்க்கை தரம் இதில் வங்கியாளர்கள் மாவட்டத்தில் தொழில் வளம் பெருகவும், விவசாயத்தினை பெருக்கிடவும் கடன்களை வழங்கி தங்களது பங்களிப்பை செலுத்த வேண்டும். மேலும் தங்களது வங்கிகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட கடன் தொகையினை உரிய முறையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டும். இதன் மூலம் பொதுமக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திட வேண்டும்.

ஒவ்வொரு காலாண்டிற்கும் வங்கிகள் தங்களது இலக்கினை எய்திட தொழில் கடன், கல்விக்கடன், விவசாயக்கடன், தனிநபர் கடன், வீட்டு கடன் உள்ளிட்ட கடன்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். இந்த நிகழ்ச்சியில் முன்னோடி வங்கி மேலாளர் அறிவழகன், கனரா வங்கி முதன்மை மேலாளர் சங்கரா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மார்க்கெட்டிற்கு வரத்து அதிகரிப்பு: சேலத்தில் காய்கறிகள் விலை வீழ்ச்சி தக்காளி கிலோ ரூ.5-க்கு விற்பனை**



மார்க்கெட்டிற்கு வரத்து அதிகரித்து உள்ளதால் சேலத்தில் காய்கறிகள் விலை வீழ்ச்சி அடைந்துள்ளன. தொடர்ந்து தக்காளி கிலோ ரூ.5-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விலை வீழ்ச்சி சேலத்தில் உள்ள உழவர் சந்தைகள் மற்றும் காய்கறி மார்க்கெட்டிற்கு தற்போது காய்கறிகள் வரத்து அதிகரித்து உள்ளன. இதனால் பெரும்பாலான காய்கறிகள் விலை வீழ்ச்சி அடைந்துள்ளன. குறிப்பாக, கடந்த 10 நாட்களுக்கு மேலாக தக்காளி கிலோ ரூ.5-க்கு விற்கப்பட்டு வருகிறது. இதனால் பொதுமக்கள் பலர் தக்காளியை கிலோ கணக்கில் வாங்கி செல்கின்றனர். இதேபோல், கத்தரிக்காய், வெண்டைக்காய், புடலங் காய் உள்ளிட்ட சில காய்கறிகள் விலையும் குறைந்துள்ளன. நேற்று கத்தரிக்காய் கிலோ ரூ.20-க்கும், வெண்டைக்காய், புடலங்காய் கிலோ ரூ.16-க்கும், பாகற்காய் கிலோ ரூ.20-க்கும், அவரைக்காய் கிலோ ரூ.22-க்கும், பீட்ரூட் கிலோ ரூ.24-க்கும் விற்பனை செய்யப்பட்டன. உற்பத்தி அதிகம் உருளைக்கிழங்கு கிலோ ரூ.24-க்கும், முட்டைக்கோஸ் கிலோ ரூ.20-க்கும், கேரட் கிலோ ரூ.48-க்கும் விற்கப்பட்டன. இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, ‘விவசாயிகள் பலர் காய்கறிகள் உற்பத்தியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இதனால், காய்கறிகள் உற்பத்தி அதிகரித்து உள்ளதால் கடந்த சில நாட்களாக மார்க்கெட்டிற்கு

வரத்து கூடுதலாக வருகிறது. இதனால் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதில், தக்காளி அதிகளவு வருவதால் கிலோ ரூ.5-க்கு தான் விற்கப்படுகிறது. காய்கறிகள் விலை இன்னும் 15 நாட்கள் வரை குறைந்து தான் காணப்படும்' என்றார்.

**தஞ்சையில் இருந்து திருப்பூருக்கு அரவைக்காக 1,900 டன் நெல் சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது**



தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுதோறும் குறுவை, சம்பா, தாளடி என முப்போகம் நெல் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். தற்போது சம்பா நெல் அறுவடை பணி நடைபெற்று வருகிறது. இப்படி அறுவடை செய்யப்பட்ட நெல், விவசாயிகளிடம் இருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் பெறப்பட்டு நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மேலும் பிள்ளையார்பட்டி, புனல்குளம், வீரமரசன்பேட்டை, பருத்தியப்பர்கோவில், அம்மன்பேட்டை ஆகிய பகுதிகளில் உள்ள சேமிப்பு கிடங்குகளிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இந்த நெல் அரவைக்காக பிற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம். அதன்படி நெல் கொள்முதல் நிலையங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் அரவைக்காக லாரிகளில் ஏற்றப்பட்டு, தஞ்சை ரெயில் நிலையத்திற்கு

நேற்றுகாலை கொண்டு வரப்பட்டன. பின்னர் லாரிகளில் இருந்த நெல்மூட்டைகளை தொழிலாளர்கள் சரக்குரெயிலில் ஏற்றினர். மொத்தம் 42 வேகன்களில் 1,900 டன் நெல் ஏற்றப்பட்டது. பின்பு நெல் மூட்டைகள் ஏற்றப்பட்ட இந்த வேகன்கள் தஞ்சையில் இருந்து திருப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**திருச்சியில் வரத்து அதிகரிப்பால் மல்லிகை பூ விலை குறைந்தது ஒரு கிலோ ரூ.50–க்கு விற்பனை**



திருச்சியில் வரத்து அதிகரிப்பால் மல்லிகை பூ விலை குறைந்தது. ஒரு கிலோ ரூ.50–க்கு விற்பனையானது. மார்க்கெட்டிற்கு வரத்து அதிகரிப்பால் மல்லிகை பூ கிலோ ரூ.50–க்கு விற்பனையானது.

<u>வரத்து அதிகரிப்பு :</u> திருச்சியில் காந்திமார்க்கெட் மற்றும் ஸ்ரீரங்கத்தில் பூ மார்க்கெட் உள்ளது. திருச்சி மாவட்டம் மற்றும் பக்கத்து மாவட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தாங்கள் விளைவித்த பூக்களை விற்பனைக்காக திருச்சி மார்க்கெட்டுகளுக்கு கொண்டுவருவது வழக்கம். மொத்த வியாபாரிகள் அதனை பெற்று விற்பனை செய்வார்கள்.

கடந்த சில மாதங்களாக மல்லிகை பூ விளைச்சல் பாதிப்படைந்திருந்தால் வரத்து குறைவாக இருந்தது. இந்த நிலையில் தற்போது மல்லிகை பூ விளைச்சல் பாதிப்பில்லாததால் வரத்து அதிகரித்துள்ளது. இதனால்

கடந்த சில வாரங்களுக்கு முன்பு கிலோ ரூ.150–க்கு விற்பனையான மல்லிகை பூ நேற்று கிலோ ரூ.50–க்கு விற்பனையானது. இதனால் மல்லிகை பூவை அதிக அளவில் மக்கள் வாங்கி சென்றனர்.

பிச்சிப்பூ : திருச்சி காந்திமார்க்கெட்டில் விற்பனையான பூக்களில் சிலவற்றின் விலை கிலோ கணக்கில் வருமாறு:–

கனகாம்பரம் பூ ஒரு கிலோ ரூ.250–க்கும், பிச்சிப்பூ ரூ.30–க்கும், சம்மங்கி ரூ.40–க்கும், செவ்வந்தி ரூ.60–க்கும், அரளிப்பூ ரூ.60–க்கும், ரோஜா பூ ரூ.40–க்கும் விற்பனையானது. மேற்கண்ட பூக்களின் விலைகளில் பெரிய அளவில் ஏற்றம் இல்லை எனவும், சராசரியாக விற்பனையாவதாக பூ வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

**வேப்பமர இலைகள் காய்ந்து கருகுவது ஏன்? வேளாண் ஆராய்ச்சி நிலைய தலைவர் விளக்கம்**



வேலூர்,

வேலூர் மாவட்டத்தில் வேப்பமர இலைகள் காய்ந்து கருகுவது ஏன்? என்பதற்கு வேளாண் ஆராய்ச்சி நிலைய தலைவர் பாண்டியன் விளக்கம் அளித்து உள்ளார். வேப்ப மரங்கள்

வேலூர் மாவட்டத்தில் குறிப்பாக வேலூரில் தற்போது பெரும்பாலான இடங்களில் வேப்பமர இலைகள் முழுவதுமாக காய்ந்து கருகிய நிலையில் பட்டுப்போனது போன்று காணப்படுகிறது.

இதுகுறித்து விரிஞ்சிபுரம் வேளாண் ஆராய்ச்சி நிலைய பேராசிரியரும், தலைவருமான பாண்டியன் கூறியதாவது:– தற்போது தமிழகத்தில் இலையுதிர் காலம் நடைபெற்று வருகிறது. இதனால் பெரும்பாலான மரங்களில் உள்ள இலைகள் உதிர்ந்துள்ளன. ஆனால் வேப்ப மரங்களில் மட்டும் கொண்டைப்பகுதி இலைகள் காய்ந்து கருகி, மரத்தில் இருந்து உதிராமல் மரமே பட்டுபோனது போன்று காணப்படுகிறது.

இதற்கு காரணம், மாவட்டத்தில் சில ஆண்டுகளாக மக்கள் எதிர்பார்த்த அளவிற்கு மழை பெய்யவில்லை. ஆனால் கடந்த நவம்பர் மாதம் வடகிழக்கு பருவ மழை எதிர்பார்த்ததை விட அளவுக்கு அதிகமாக பெய்தது. அப்போது, பச்சை பசேல் என்று காணப்பட்ட வேப்ப மர இலைகள் தற்போது கருகுவதற்கு பருவ நிலை மாற்றமும் ஒரு காரணமாக இருக்கலாம். ஒரு வகை கொசு மேலும் மழைக்காலங்களில் உருவாகும் 'டீ மஸ்கிடோ மக்' என்ற ஒரு வகை கொசுவினாலும் பெரும்பாலான வேப்ப மர இலைகள் கருகும். இந்த வகை கொசுக்கள் தேயிலை செடிகளை அதிகப்படியாக தாக்கும். கடந்த சில ஆண்டுகளாக மழையின் அளவு குறைவாக இருந்ததால் வேலூர் மாவட்டத்தில் இந்த வகை கொசுக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. எனவே ஒரு சில இடங்களில் உள்ள வேப்ப மர இலைகள் இதனால் பாதிக்கப்பட்டு கருகின. ஆனால் தற்போது அதிகளவில் மழை பெய்ததால் 'டீ மஸ்கிடோ மக்' இன கொசுக்கள் அதிகளவில் உருவாகியுள்ளது.

இந்த கொசுக்கள் வேப்பமரங்ககளில் தங்கி தாக்குவதால், மரங்களின் இலைகள் கருகுகின்றன. இதற்கு மருந்துகள் எதுவும் தெளிக்க வேண்டியது இல்லை. கருகிய இலைகள் உதிர்ந்து சில நாட்கள் கழித்து புதிய இலைகள் துளிர்த்து விடும். இவ்வாறு அவர் கூறினார்.

**வருவாய் ஈட்ட விவசாயிகளுக்கு பயிற்சி**

கால்நடை வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் திண்டுக்கல்லில் நடைபெற்றது. மாவட்ட கால்நடை வளர்ப்போர் சங்க தலைவர் ராமகிருஷ்ணன் தலைமை வகிக்க, போரையன் முன்னிலை வகித்தார். கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் பழனிவேலு, டிஎஸ்பி.சிகாமணி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர் சிவசீலன் பேசியதாவது: விவசாயத்தில் ஏற்ற, இறக்கத்தின் போது கால்நடைகள் தான் பொருளாதார ரீதியாக விவசாயிகளுக்கு பெரிதும் கைகொடுக்கின்றன. தற்போது பரண் மேல் ஆடுகள் அதிகளவில் வளர்க்கப்படுகின்றன. தளச்சேரி ஆடுகள் மூலம் கலப்பினம் செய்யப்பட்டு ஆடுகளின் எண்ணிக்கையை உயர்த்தலாம். அதிக எடையும் இருக்கும் என்றார்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் சங்கம் சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வங்கியாளர்கள், கூட்டுறவு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் மூட்டை வரத்து குறைந்தது

கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.42 லட்சத்திற்கு பஞ்சுமூட்டை கொள்முதல் செய்யப்பட்டன.கள்ளக்குறிச்சி பருத்தி சந்தைக்கு கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், சேலம் உள்ளிட்ட மாவட்டத்தில் இருந்து விவசாயிகள் பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

அதில் நேற்று 472 விவசாயிகள் 3079 பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு

எடுத்து வந்தனர். கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரத்தில் பஞ்சுமூட்டை வரத்து குறைவாக இருந்தது. எல்ஆர்ஏ பருத்தி ரகம் ஒரு குவிண்டால் குறைந்த விலை ரூ.4327, அதிகபட்ச விலை ரூ.4729, சுவின் குறைந்த விலை ரூ.5462, அதிக விலை ரூ.5799 என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்படி 3079 பஞ்சுமூட்டையில் மொத்தம் ரூ.42 லட்சத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டன.

**மானிய விலையில் கறவை மாடுகள் வழங்கல்**

வானூர் தாலுகா திருவக்கரை கிராமத்தில் வேளாண்மைத்துறை சார்பில் மான்ய விலையில் விவசாயிகளுக்கு கறவை மாடுகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. திருவக்கரை கிராமத்தில் நீடித்த நிலையான தேசிய இயக்கம் மூலம் மானாவாரி உளுந்து சாகுபடி செய்திருந்த விவசாயிகளுக்கு 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.15 ஆயிரம் மான்ய விலையில் கறவை மாடுகள் வழங்கப்பட்டது. மாவட்ட கவுன்சிலர் பக்தவச்சலம் பயனாளிகளுக்கு மாடுகளை வழங்கினார். ஆத்மா திட்ட தலைவர் ஏழுமலை தலைமை தாங்கினார். ஊராட்சி தலைவர் வேணு, வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ஆரோக்கியராஜ், பண்ணை மேலாளர் சுரேஷ், கால்நடை மருத்துவர் புருஷோத்தமன், ஆத்மா தொழில்நுட்ப மேலாளர் நரசிம்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் ராஜ்குமார், உதவி தொழில்நுட்ப மேலாளா–்கள் சந்திரசேகர், வீரமணி ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**பிரெஞ்ச் நாட்டின் தரத்தில் வடக்கு மாநகராட்சியில் 2 பூங்காக்கள் புதுப்பிப்பு**



File Photo

பிரெஞ்ச் நாட்டின் தரத்தில் வடக்கு மாநகராட்சியில் உள்ள 2 பூங்காக்கள் தரம் உயர்த்தப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பிரெஞ்ச் நாட்டின் ‘பாவ் பியர்ன்’ நகரின் வணிகம் மற்றும் தொழில்துறை பிரிவின் தலைவர் பேட்ரிக் டீ ஸ்டம்பா தலைமையிலான குழுவினர், நேற்று முன்தினம் வடக்கு மாநகராட்சியின் மேயர் ரவீந்திரா குப்தாவை சந்தித்து பேசினர். இதைத் தொடர்ந்து, வடக்கு மாநகராட்சியில் உள்ள 2 பூங்காக்களை தத்தெடுப்பதாக பாவ் பியர்ன் உள்ளாட்சி நிர்வாகம் அறிவித்தது. மேலும் இப்பூங்காக்களை பிரெஞ்ச் நாட்டு பாணியில், புதுப்பித்து தருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதேபோல், வடக்கு மாநகராட்சி தனது பங்கிற்கு, பாவ் பியர்ன் நகரில் உள்ள 2 பூங்காக்களை தடுத்தெடுத்து சீரமைத்து தருவதாக தெரிவித்தது. இரு தரப்பிலும், பரஸ்பர ஒப்பந்தத்தின் அடிப்படையில் பூங்காக்கள் புனரமைக்கப்பட உள்ளன. மேலும் இரு தரப்புக்கும் இடையே நகராட்சி நிர்வாகத்தில் ஒத்துழைப்பு, கலாசார பரிமாற்றம், சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகிய அம்சங்கள் பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

**வத்திராயிருப்பு பகுதியில் தேங்காய் விலை வீழ்ச்சியால் தென்னை விவசாயிகள் கண்ணீர்**

வத்திராயிருப்பு பகுதியில் வத்திராயிருப்பு, வண்டிப்பண்ணை, மந்தித்தோப்பு சேதுநாராயணபுரம், கான்சாபுரம், கூமாப்பட்டி, பிளவக்கல் அணை, புதுப்பட்டி, மகாராஜபுரம் உள்பட பல்வேறு கிராமங்களில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் தென்னை விவசாயம் உள்ளது. கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக பருவமழை, கோடை மழையும் சரிவர பெய்யாததால் வத்திராயிருப்பு பகுதியில் உள்ள பல கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் போனது. இதனால் நூற்றுக்கணக்கான ஏக்கரில் உள்ள தென்னை மரங்கள் கருகின. கடந்த ஆண்டு ஓரளவு மழை பெய்தது. ஆனால் தற்போது விளைந்துள்ள தேங்காயின் விலை ரூ.3.30 காசுக்கு தான் வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். 10 ரூபாய்க்கு குறையாமல் இருந்தால் தான் விவசாயிகளுக்கு ஓரளவு கட்டுப்படியாகும் என விவசாயிகள் கூறுகின்றனர். தேங்காய் வியாபாரி கணேசன் கூறுகையில், கடந்த 4 மாதத்திற்கு முன்பு குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட வடமாநிலங்களுக்கு தேங்காய் உரித்து அனுப்பப்பட்டது. அதன் பிறகு தேங்காயின் விலை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. தற்போது தேங்காயை வடமாநில வியாபாரிகள் வாங்காததால், முழுமையாக உரித்து காங்கேயம், வெள்ளக்கோவில் ஆகிய இடங்களுக்கு அனுப்புகிறோம். அவர்களும் குறைந்த விலைக்கே எங்களிடம் வாங்குவதால் நஷ்டம் ஏற்படுகிறது.

தென்னை விவசாய சங்கம் மாவட்ட செயலாளர் சிங்கராஜ் கூறுகையில், வத்திராயிருப்பு பகுதியில் நெல் விவசாயத்திற்கு அடுத்தப்படியாக தென்னை விவசாயம் உள்ளது. விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலையை அரசு நிர்ணயம் செய்ய வேண்டும். ஏற்கனவே மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள தோட்டங்களில் தென்னை

மரங்களை காட்டுயானைகள் ஒரு புறம் அழித்து வருகிறது மறுபுறம் தேங்காய் விலை கண்டு விவசாயிகள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். இந்த நிலையை போக்க தேங்காய்க்கு கட்டுப்படியான விலையை கொடுத்து வத்திராயிருப்பில் தேங்காய் கொள்முதல் நிலையத்தை அரசே அமைத்து வாங்கவேண்டும் என்றார்.

**டெல்டா மாவட்டங்களில் அறுவடை முடிந்ததால் வயல்களில் இயற்கை உரம் கிடைக்க மேய்ச்சலுக்கு ஆடுகள் வருகை பட்டி அமைத்து பராமரிப்பு**

தஞ்சை மாவட்டத்தில் 1 லட்சத்து 36ஆயிரம் எக்டேர், திருவாரூர் மாவட்டத்தில் 1 லட்சத்து 57ஆயிரமம் எக்டேர், நாகை மாவட்டத்தில் 1 லட்சத்து 92 ஆயிரம் எக்டேர் விவசாய சாகுபடி நிலங்கள் உள்ளன. 3 மாவட்டங்களிலும் நெல் அறுவடை முடியும் தருவாயில் உள்ளது. இந்நிலையில் போதுமான இயற்கை உரத்தை வயல்களில் சேர்த்திட வீடுகளில் சேகரித்து வைக்கப்பட்ட சாணங்களை மாட்டுவண்டி மற்றும் டிராக்டர் மூலம் சாகுபடி நிலங்களில் அறுவடைக்கு பிறகு கொட்டுவார்கள். கால்நடை வளர்க்க வசதி இல்லாத விவசாயிகள் மாடுகள் மற்றும் ஆடுகளை மேய்ப்பவர்களிடம் தங்கள் வயல்களில் மேய்த்து இயற்கை உரத்தினை பெற ஏற்பாடுகள் செய்வார்கள்.

விழுப்புரம், புதுக்கோட்டை, சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் இருந்து தற்போது டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களுக்கு மேய்ச்சலுக்காக ஆடுகளை கொண்டுவர தொடங்கியுள்ளனர். இவ்வாறு வந்துள்ள புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியை சேர்ந்த ஆடு மேய்க்கும் தொழிலாளி கதிரேசன் என்பவர் கூறுகையில், சம்பா, தாளடி அறுவடை முடிந்தவுடன் ஆடுகளை மேய்ச்சலுக்காக டெல்டா மாவட்டங்களுக்கு கொண்டு வருவோம். இங்கு மேய்ச்சல் உள்ள பகுதிகளில் ஆடுகளை மேய்த்து மாலை முதல் மறுநாள் காலை வரை வயல்களில் கிடை கட்டி தங்க வைப்போம். கழிவுகளுக்காக ஆடு ஒன்றுக்கு ரூ.1 வீதம் வயல் உரிமையாளர்கள் எங்களுக்கு

கொடுப்பார்கள். என்னிடம் 400 ஆடுகள் உள்ளதால் ரூ.400 வரை கிடைக்கும். ஆடு மேய்க்கும் தொழிலாளியான எங்களிடம் 300 முதல் 500 ஆடுகளை ஓனர் வாங்கி கொடுத்து விடுவார். அந்த ஆடுகளை மேய்ப்பது முதல் அவைகளை பராமரிப்பது, ஆடுகள் ஈனும் குட்டிகளை பராமரிப்பது என அனைத்து வேலைகளையும் நான் மற்றும் எனது குடும்பத்தினர் கவனித்து வருவோம். இதற்கு கூலியாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 ஆயிரம் வரை உரிமையாளர்கள் தருவார்கள். அதை வைத்துக் கொண்டு தான் குடும்பத்தை நடத்தி வருகிறோம். ஆடுகளை வாங்கிக் கொடுத்த உரிமையாளர்கள் அவ்வப்போது நேரில் வந்து ஆடுகள் பராமரிக்கப்படுவதை பார்வையிடுவார்கள். பின்னர் இறைச்சிக்கு தேவையான ஆடுகளை பிடித்துச் செல்வார்கள். இதனால் ஆடு ஒன்றுக்கு ரூ.4,000 முதல் ரூ.7,000 வரை உரிமையாளருக்கு லாபம் கிடைக்கும்.

இரவு நேரங்களில் கிடை கட்டுவதற்கு வயல் கிடைக்காத நிலையில் பொது இடங்களில் தங்க வைத்து அதன் கழிவுகளை சேகரித்து அதை தோட்டம் அமைத்து சாகுபடி செய்யும் விவசாயிகளிடம் விற்பனை செய்வோம். இரவு நேரங்களில் ஆடுகளை தங்க வைத்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை முழுவதும் ஆடு உரிமையாளர்களிடம் கொடுத்து விடுவோம். நாள்தோறும் 3 வேளைக்கு தேவையான உணவு செலவு மற்றும் ஆடுகளின் மருத்துவ தேவைக்கான செலவை ஆடு உரிமையாளர்கள் எங்களுக்கு தனியாக கொடுத்து விடுவார்கள். எங்களை போன்று ஏராளமானோர் குடும்பம், குடும்பமாக ஆடுகளை மேய்த்து வருகிறோம் என்றார்.

## எள் சாகுபடியில் தொழில்நுட்பங்கள் வேளாண் உதவி இயக்குனர் விளக்கம்

சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் மாசிப்பட்ட எள் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது. குறைந்த வயதில் (85 நாட்கள்) அதிக நீர்

தேவையின்றி குறைந்த சாகுபடி செலவில் அதிக லாபம் ஈட்டக்கூடிய பயிர் எள். எள் சாகுபடி செய்வதற்கு பிப்ரவரி, மார்ச் மாத (மாசி பட்டம்) பருவமே ஏற்ற தருணம் ஆகும். கோ.1, டி.எம்.வி 4, 6 (85-90 நாட்கள்), டி.எம்.வி 3 (80-85 நாட்கள்), வி.ஆர்.ஐ.எஸ்.வி1 (70-75 நாட்கள்) ஆகியவை ஏற்ற ரகங்களாகும். எள் சாகுபடிக்கு முன்னதாக வயலை புழுதிபட உழ வேண்டும். கடைசி உழவிற்கு முன் 5 டன் தொழு உரம் அல்லது கம்போஸ்டு உரம் இடவேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான 2 கிலோ விதையை தேர்வு செய்து விதைமூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்துவதற்காக டிரைக்கோ டெர்மாவிரிடி உயிர் பூசான கொல்லி மருந்து ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற விகிதத்தில் விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்யவேண்டும். பின்னர் விதைப்பதற்கு முன் ஒரு பாக்கெட் அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் பொட்டலத்தை அரை லிட்டர் ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து அதனை விதையுடன் கலந்து நேர்த்தி செய்து நிழலில் உலர்த்தி பின்னர் விதைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான 14:9:9 என்ற விகிதத்தில் தழை, மணி, சாம்பல் சத்துக்களை அடியுரமாக இடவேண்டும். மேலுரம் இட தேவையில்லை. மாங்கனீசு சல்பேட் என்ற நுண்ணூட்ட உரத்தினை ஏக்கருக்கு 2கிலோ வீதம் 18 கிலோ மணலுடன் கலந்து வயலில் சீராக தூவி மேலாக மூட வேண்டும். பின்னர் 15ம் நாள் 15செமீ இடைவெளி வைத்து செடியினை களைத்துவிட வேண்டும். விதைத்த 30ம் நாள் 30 செமீ இடைவெளி வைத்து மீண்டும் ஒருமுறை செடியினை களைத்து விட வேண்டும். இதனால் அதிக கிளைகள் வெடித்து அதிக காய்கள் பிடிக்க உதவுகிறது. விதை விதைத்தவுடன் ஒரு முறையும், 7ம் நாள் ஒரு முறையும், விதைத்த 25ம்நாள் ஒரு முறையும், பூக்கும் தருணம் ஒரு முறையும், காய் பருவத்தில் ஒரிரு முறையும் நீர்பாசனம் செய்ய வேண்டும். இவ்வாறு தொழில் நுட்பங்களை கடைபிடித்தால் எள் பயிரில் குறைந்த செலவில் அதிக லாபம் பெறலாம். தற்போது வி.ஆர்.ஐ.எஸ்.வி1 ரகம் போதுமான அளவு

கையிருப்பில் உள்ளது. இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**ஆண்டிபட்டி பகுதியில் கொட்டை முந்திரியில் இலை கருகல் நோய் விவசாயிகள் கவலை**

ஆண்டிபட்டி பகுதியில் கொட்டை முந்திரி சாகுபடியில் இலை கருகல் நோய் ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகாவில் ராமலிங்கபுரம், கடமலைக்குண்டு, கண்டமனூர், குமணன்தொழு உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில், ஆயிரம் ஏக்கருக்கும் மேலாக கொட்டை முந்திரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களாக இப்பகுதியில் போதிய மழையில்லாததால், கொட்டை முந்திரிச் செடியில் ஒரு வித பூஞ்சைகளால் கருகல் நோய் பரவி வருகிறது. இதனால், கொட்டை முந்திரி செடி மற்றும் மரங்களில் உள்ள இலைகள் வேகமாக உதிர்கின்றன. கருகல் நோய் பரவுவதை தடுக்க விவசாயிகள் பலவிதமான மருந்துகளை அடித்தும் பயனில்லை. இது குறித்து விவசாயிகள் ஆண்டிபட்டி தோட்டக்கலைத்துறை அலுவலர்களிடம் புகார் கூறியும் நடவடிக்கை இல்லை. இதனால் நடப்பாண்டில் கொட்டை முந்திரிவிளைச்சல் வெகுவாக பாதிக்கும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். எனவே, கொட்டை முந்திரியில் கருகல்நோயை கட்டுப்படுத்த, தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் உரிய தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

201 **கிராமங்களில் கால்நடை மருத்துவ முகாம்**

அரியலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாமினை கலெக்டர் சரவணவேல்ராஜ் துவங்கி வைத்தார். அரியலூர் ஊராட்சி ஒன்றியம் அம்மாகுளம் ஊராட்சியில் கால்நடைப்பராமரிப்புத் துறையின் சார்பில் கால் மற்றும் வாய்நோய் தடுப்பு திட்டம் 10வது சுற்று தடுப்பூசி பணியினை கலெக்டர்

சரவணவேல்ராஜ் துவக்கி வைத்து தெரிவித்ததாவது:அரியலூர் மாவட்டத்தில் 201 கிராமங்களில் 10வது சுற்று கால் நடை மருத்துவ முகாம் நடைப்பெற்று வருகிறது. தமிழக அரசின் சிறப்பு திட்டங்களில் அரியலூர் மாவட்டத்தில் விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 15 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 750 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 65 லட்சத்து 63 ஆயிரத்து 500 மதிப்பில் 750 கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை 947 குட்டிகளை ஈன்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் 201 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 12 ஆயிரத்து 230 பயனாளிகளுக்கு 48 ஆயிரத்து 920 வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இவை நாளது தேதிவரை 62 ஆயிரத்து 340 குட்டிகளை ஈன்றுள்ளது. இந்த கால்நடைகளோடு விவசாயிகள் பராமரிக்கும் கால்நடைகளையும் வளர்த்து பராமரித்து பால் உற்பத்தியை பெருக்கும் நோக்கில் தொடர் சிகிச்சை வழங்க கால்நடைப் பாதுகாப்பு திட்ட முகாம்கள் ஒன்றியத்திற்கு 14 முகாம்கள் வீதம் அரியலூர் மாவட்டத்தில் 84 முகாம்கள் இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் இதுவரை 80 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் இது தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தி மாவட்டத்திலுள்ள 201 ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டம் நடத்தப்பட்டு, அதில் தடுப்பூசி அவசியம் பற்றி கால்நடை உதவி மருத்துவர்களால் எடுத்து கூறப்பட்டது. இத்திட்டத்திற்காக 1,68,000 டோஸ் தடுப்பு மருந்துகள் ரூ.13.44 லட்சம் மதிப்பீட்டில் பெறப்பட்டுள்ளது. மேற்படி தடுப்பூசி பணிக்காக வட்டாரத்திற்கு இருக்குழுக்கள் வீதம் கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் அடங்கிய 12 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி செயலாளர்கள், கிராம உதவியாளர்கள், ஆவின், புதுவாழ்வு (ம) மகளிர் திட்டத்தினருடன் இணைந்து கால்நடைகளுக்கு 100 சதவீத தடுப்பூசி பணி மேற்கொள்ளுவதுடன்

தடுப்பூசி பணி அடையாள அட்டை வழங்கி பதிவுகளும் மேற்கொண்டு வருகின்றனர். அம்மாக்குளம் கிராம ஊராட்சியில் உள்ள 83 குக்கிராமங்களில் உள்ள 258 கால்நடைகளுக்கும் தடுப்பூசி பணி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, தடுப்பூசி பணிமேற்கொள்ளப்பட்டுவருகிறது. விடுப்பட்ட கால்நடைகள் ஏதும் இருப்பின் வரும் 22ம் தேதி முதல் 31ம் தேதி முடிய அவற்றிற்கும் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படவுள்ளது என்றார். நிகழ்ச்சியில், கால்நடைப்பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர் ரவீந்திரன், உதவி கால்நடை மருத்துவ அலுவலர் பாஸ்கரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**புற்றுநோயை தடுக்கும் கேரட்**




தோல், கண்களுக்கு நன்மை கொடுக்க கூடியதும், புற்றுநோயை தடுக்கவல்லதுமானது கேரட் பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. காலை நேரத்தில் அரை டம்ளர் கேரட் சாறு குடித்துவர வயிற்றில் உள்ள புழுக்கள் வெளியேறும். வயிறு சுத்தமாகும். உணவு நன்கு செரிமானம் ஆகும். பூச்சிகளால் வரும் நோய்களை தடுக்கிறது. உலர்ந்த சருமம் இருப்பவர்கள் கேரட் சாறுடன் தேன் அல்லது ஆலிவ் ஆயில் சேர்த்து முகத்தில் தடவி 15 நிமிடங்கள் கழித்து கழுவினால் சருமத்துக்கு தேவையான சத்து கிடைக்கும்.

கேரட்டில் உள்ள வைட்டமின் ‘ஏ’ சத்து கண்களுக்கு பலம் கொடுக்க கூடியது. விழித்திரைக்கு பலம் சேர்க்கும். கண்பார்வை நன்றாக இருக்கும். தோலுக்கு ஆரோக்கியத்தை தருகிறது. கோடைகாலத்தில் வெளியில் சென்று வரும்போது புறஊதா கதிர்கள் தோலை பாதிக்கிறது. தோல் கறுப்பாவதை தடுக்கிறது. தோலில் சிராய்ப்பு காயம், அரிப்பு இருந்தால் கேரட்டை பசையாக்கி தடவினால் அரிப்பு, சிவப்பு தன்மை போகும். வேர்குரு மறையும். தோலில் ஏற்படும் பிரச்னைக்கு மேல்பூச்சு மருந்தாகிறது. புண்களை ஆற்றும் வல்லமை உடையது. கேரட் கிருமிகளை அழித்து நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. வீக்கம், வலியை கரைக்க கூடியது. கேரட்டை பயன்படுத்தி கோடைகாலத்துக்கான ஜூஸ் தயாரிக்கலாம். ஒரு டம்ளர் கேரட் சாறுடன் சிறிது ஏலக்காய் பொடி, பனங்கற்கண்டு சேர்த்து காலையில் குடித்துவர உடல் சோர்வு நீங்கி புத்துணர்வு ஏற்படும். உடலுக்கு குளிர்ச்சியை தருகிறது. கோடைகாலத்தில் உடலில் இருந்து வெளியேறும் நீர்ச்சத்தை சமப்படுத்தும். நாக்கு, தொண்டை, குடலில் புற்றுநோய் வராமல் தடுக்கிறது. கேரட்டை பயன்படுத்தி அல்சருக்கான மருந்து தயாரிக்கலாம். கேரட் துருவலுடன் உப்பு, அரை ஸ்பூன் தனியா பொடி, மல்லி, புளிப்பில்லாத தயிர் சேர்த்து கலந்து சாப்பிட்டுவர வயிற்றுப்புண் சரியாகும்.

வயிற்று வலி குணமாகும். நாள் முழுவதும் புத்துணர்வு ஏற்படும். எலும்புகள், பற்கள், தோல், கண் ஆகியவற்றுக்கு நன்மை தரும்.கேரட்டை மென்று சாப்பிட்டு வந்தால், வாயில் இருக்கும் கிருமிகள் போகும். பற்களுக்கு பலம் கிடைக்கிறது. ஈறுகள் கெடாமல் இருக்கும். வாய் புண்கள் சரியாகும். கேரட்டை பயன்படுத்தி ஈரலுக்கு பலம் தரும் மருந்து தயாரிக்கலாம். கேரட்டை பசையாக அரைக்கவும். இதனுடன் சிறிது மஞ்சள் சேர்க்கவும். சிறிது தண்ணீர் விட்டு கொதிக்க விடவேண்டும்.

இதை வடிக்கட்டி குடித்துவர புண்கள் ஆறும். நரம்பு மண்டலங்கள் பலம் பெறும். ரத்த அணுக்களுக்கு ஆரோக்கியத்தை கொடுக்கிறது ஈரல் பலம் அடைகிறது. ரத்தம் சுத்தமாகும். தேவையில்லாத நச்சுக்கள் வெளியேறும். பித்தம் சேராமல் தடுக்கும் கேரட், மஞ்சள் காமாலை வராமல் தடுக்கிறது. புற்றுநோய் செல்களை தடுக்கிறது. தினமும் ஒரு கேரட் சாப்பிடும்போது புற்றுநோய் வராமல் தடுக்கிறது. கோடைகாலத்தில் குளிர்ச்சி தரும் உணவாகிறது. தோலுக்கு வண்ணத்தை தருகிறது.

**மலேரியாவை கட்டுப்படுத்தும் மர சூரிய காந்தி**




டித்தோனியோ டிவைர்சிபோலியா என்பது இதன் தாவர பெயராகும். சூரிய காந்தி பூவை போலவே உள்பகுதிகளில் விதைகள் மற்றும் மகரந்த துகள்கள் காணப்படுகின்றன. சூரிய காந்தியைப் போல காணப்பட்டாலும் இது மரமாக வளரும் தாவர வகையை சேர்ந்ததாகும். இதன் இலைகள், பூக்கள் ஆகியவையும் மருந்தாக பயன்படுகிறது.

இது மேற்பூச்சு மருந்தாக மட்டுமின்றி உள்மருந்தாக எடுத்துக் கொள்வதற்கும் உதவுகிறது. மலேரியா காய்ச்சலை போக்கக் கூடிய சிறந்த மருந்தாக மர சூரிய காந்தி விளங்குகிறது. சின்கோனா என்று அழைக்கப்பட கூடிய கொய்னா மரத்தில் இருந்து எடுக்கப்பட்ட சத்துப் பொருள் குளோரோ குயின் என்ற மலேரியா மருந்துகள் தயாரிக்கப் பயன்படுகின்றன. அதே போன்ற ஒரு குணத்தை மர சூரிய காந்தியும்

பெற்றிருக்கிறது. மர சூரிய காந்தி அல்லது காட்டு சூரிய காந்தி என்று அழைக்கப்படும் இதன் மலர்களை கொண்டு மலேரியா காய்ச்சல், சாதாரண காய்ச்சல் ஆகியவற்றை போக்கும் மருந்தை தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள். மர சூரிய காந்தி பூக்கள், தனியா, பனங்கற்கண்டு. மர சூரிய காந்தியின் ஒரு பூவின் இதழ்களை மட்டும் எடுத்துக் கொள்ளலாம். அதனுடன் அரை ஸ்பூன் தனியா மற்றும் சிறிது பனங்கற்கண்டை சேர்த்து கஷாயம் தயார் செய்ய வேண்டும்.

இவற்றை ஒரு பாத்திரத்தில் எடுத்து ஒரு டம்ளர் அளவுக்கு நீர் சேர்த்து நன்றாக கொதிக்க விட வேண்டும். இதை வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். இதை தினமும் பருகுவதன் மூலம் மலேரியா உள்ளிட்ட காய்ச்சலில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். இதை மருந்தாக எடுத்துக் கொள்ளும் போது ஒரு வேளைக்கு கஷாயம் தயாரிக்க ஒரு பூ மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும். அளவுக்கு அதிகமாக எடுத்துக் கொண்டால் எதிர் விளைவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இதை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு வேளை என்ற அளவில் ஒரு வாரம் வரையில் இதை எடுத்துக் கொள்வதன் மூலம் காய்ச்சலை கட்டுப்படுத்தலாம். மலேரியாவால் பாதிக்கப்பட்டவர்கள் கூடவே மருத்துவரின் ஆலோசனையையும் பெற்றுக் கொள்வது நல்லது. மர சூரிய காந்தி பூக்கள் நுண் கிருமிகளை போக்கக் கூடியது. பூஞ்ச காளான்களை அழிக்கக் கூடியது. நோய் எதிர்ப்பு தன்மை காரணமாக மலேரியா போன்ற காய்ச்சலை தணிக்கக் கூடியதாகவும் மர சூரிய காந்தி விளங்குகிறது. மேலும் இது உடல் வலியை போக்கக் கூடியதாகவும் உள்ளது. முறிந்த எலும்புகளை கூட இணைக்கும் வல்லமை மர சூரியகாந்திக்கு உள்ளது. தற்போது இதை பயன்படுத்தி சிராய்ப்பு காயங்களுக்கான, சிறிய அளவிலான தீக்காயங்களுக்கு மேற்பூச்சு மருந்து ஒன்றை தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள் மர சூரிய

காந்தி பூ, தேங்காய் எண்ணெய், சீரகம். மர சூரிய காந்தி பூக்களின் இதழ்களை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் இதை பசை போல அரைத்துக் கொள்ள வேண்டும். இரண்டு ஸ்பூன் தேங்காய் எண்ணெய்யை வாணலியில் எடுத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் பூவின் பசையை சேர்க்க வேண்டும். பூக்கள் நன்றாக பொரியும் வரையில் சிறிய வாட்டத்துடன் எண்ணெய்யை நன்றாக காய்ச்ச வேண்டும். அவ்வாறு பொரிந்து வரும் வேளையில் சிறிதளவு சீரகத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். சீரகமும் பொரிந்தவுடன் நெருப்பை நிறுத்தி விட வேண்டும். இது ஆறிய பிறகு இந்த தைலத்தை வடிகட்டி ஒரு பாட்டிலில் எடுத்து வைத்துக் கொள்ளலாம். அவ்வப்போது ஏற்படும் சிறிய அளவிலான சிராய்ப்புகள், காயங்கள், சிறிய அளவிலான தீக்காயங்களுக்கு இவற்றை மேற்பூச்சாக பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு மர சூரிய காந்தி நமக்கு பல்வேறு வகையிலும் மருத்துவ பொருளாக இருந்து பயன் அளித்து வருகிறது.

**வெற்றிலைக்கு வெரிகுட்?**



வயிறார உணவருந்திய பின் வெற்றிலை பாக்கு போட்டால்தான் விருந்தே திருப்திகரமாக முடிந்த உணர்வு பலருக்கும் இருக்கும். தாத்தாக்களும் பாட்டிகளும் பல் போன காலத்தில் கூட வெற்றிலை இடிப்பானில் இடித்தேனும் போட்டுக் கொள்வதைக் கண்டிருப்போம்.

இப்படியாக வசீகரிக்கும் தன்மையுள்ள வெற்றிலை பாக்கு போடும் பழக்கம் நல்லதுதானா? முதலாக இயற்கை வாழ்வியல் மருத்துவர் காசிப்பிச்சையிடம் கேட்டோம்... ‘‘காய் மற்றும் பூ இல்லாமல் வெறும் இலை மட்டுமே இருப்பதால்தான் அது வெற்றிலை என்று அழைக்கப்படுகிறது. திருமணம் போன்ற சுப நிகழ்வுகளுக்கு ஒருவரை அழைக்கும்போது வெற்றிலை பாக்கு வைத்துதான் அழைப்பார்கள். வெற்றிலை பாக்கு இல்லாமல் தாம்பூலம் இல்லை. வெற்றிலை பாக்கின் மகத்துவம் அறிந்ததனால்தான், அதனை நமது சடங்குகளில் முக்கியப் பொருளாக பயன்படுத்தி வந்திருக்கின்றனர். வாதம், கபம் என இரு வகைப் பிரச்னைகளையும் தீர்க்கவல்லது. செரிமானத்துக்கு உதவி புரிகிறது என்பதோடு, நல்ல பசியையும் தூண்டும். வெற்றிலையின் காரத்தன்மை சளித்தொந்தரவுகளுக்கு உகந்தது. பாக்கு ஹார்மோன் சுரப்பிகளை ஒழுங்கு செய்வதால் வளர்சிதை மாற்றம் சீராக இருக்கும். மேலும் சிறுநீரகத்தை நன்றாக இயக்கி சிறுநீரில் இருக்கும் உப்புத் தன்மையைக் குறைக்கிறது. சுண்ணாம்பு சேர்த்துக்கொள்வதால் அதில் உள்ள கால்சியம் எலும்புகளுக்கு வலுவூட்டுகிறது.

வெற்றிலை தாம்பத்திய வாழ்க்கைக்கு நன்மை புரியும் மூலிகையாகும். நாம் சராசரியான நிறமும் உயரமும் கொண்டவர்கள் என்பதால் வெற்றிலை போடும்போது மிதமான தாம்பத்திய உத்வேகம் கிடைக்கும். இந்த ஆற்றலைக் கொடுப்பதால்தான் சிறிய குழந்தைகள் முதலே வெற்றிலைக் காம்பை சாப்பிடக் கொடுக்கிறோம்" என்று, இதன் நன்மைகள் பற்றி விளக்குகிறார் காசிப்பிச்சை.வெற்றிலை பாக்கு போடுவதால் நன்மைகள் ஏற்பட்டாலும் அது எந்த முறையில் போட வேண்டும்? முறை தவறிப் போடும்போது ஏற்படும் தீங்குகள் குறித்துப் பேசுகிறார் இரைப்பை மற்றும் குடலியல் அறுவை சிகிச்சை நிபுணர் ராஜ்குமார் பழனியப்பன்...‘‘வெற்றிலை - பாக்கு வாயிலிருந்து வரக்கூடிய துர்நாற்றத்தைப் போக்கி, இருமல், சளி தொந்தரவுகளை சீர்

செய்து, மலச்சிக்கலை சீராக்கி, வாயிலுள்ள நுண்கிருமிகளை அழிக்கிறது. இது போன்றநன்மைகளை தருவதால் வெற்றிலை பாக்கு போடுவதை வாடிக்கையாக்கிக் கொள்வதில் தவறொன்றுமில்லை. ஆனால், அதை சரியான கலவையில் போட வேண்டும். ஒரு வெற்றிலை அதற்கு ஒரு அரிக்கா பாக்கு அதனுள் லைன் சுண்ணாம்பு கொஞ்சம் தடவிப் போட்டுக்கொள்வதுதான் சரியாக இருக்கும். இந்தக் கலவையில் ஏதோ ஒன்று கூடினாலும் பிரச்னைதான். வெற்றிலை அதிகமானால் ஈறையும் பல்லையும் இணைத்திருக்கும் இணைப்பைத் தளர்த்தி விடும். பல்லை அரித்து நிறத்தை மாற்றி விடும். பாக்கு அதிகமாகும்போது பல் சொத்தை ஏற்படும். மயக்கம், நெஞ்சு படபடப்பு, வாய்க்குள் இருக்கும் தசைகளில் புற்றுநோய் மற்றும் அல்சர் வர வாய்ப்பிருக்கிறது. சுண்ணாம்பு அதிகமாகும்போது வாய் மற்றும் வயிற்றில் புற்றுநோய் வரலாம். ஆக, சரியான கலவையில் சாப்பிடும்போது அதன் முழுப்பயனை அடைய முடியும். பாக்கெட்டுகளில் அடைத்து விற்கப்படும் பாக்குகளை பயன்படுத்தக்கூடாது. அரிக்கா பாக்கு என்று சொல்லக்கூடிய ஒரிஜினல் கொட்டைப்பாக்குதான் போட வேண்டும். சுண்ணாம்பில் ரோஸ் நிறம் சேர்க்கப்பட்ட சுண்ணாம்பை தடவக்கூடாது. லைன் சுண்ணாம்புதான் பயன்படுத்த வேண்டும். ஸ்வீட் பீடாவில் இனிப்புக்காக சேர்க்கப்படும் குல்கந்து போன்றவற்றை தனியாக சாப்பிடலாம். வெற்றிலையோடு சேர்த்து சாப்பிடுவது சரியான கலவையாக இருக்காது.சாப்பிட்டு முடித்தபின் வெற்றிலைஉடன் மிளகை சேர்த்துப் போடும்போது பருமன் குறையும்.

பிரசவித்த பெண்கள் வெற்றிலையில் சமையல் எண்ணெய் மற்றும் பால் கலந்து சாப்பிட்டால் தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்கும். வெற்றிலையில் தேன் சேர்த்து சாப்பிடும்போது இருமல், சளிப் பிரச்னைகள் விரைவில் குணமடையும். காயம்பட்ட இடங்களில் வெற்றிலையை அரைத்தும் பூசலாம். தென்னிந்திய உணவுகளில் அசிடிட்டி எனப்படும்

அமிலத்தன்மை அதிகமாக இருக்கும். அதை சமன் செய்வதற்கு வெற்றிலை பாக்கு கலவையில் ஆல்கலின் எனப்படும் காரத்தன்மை இருக்கிறது. அதனால்தான் தென்னிந்திய உணவுக் கலாசாரத்தில் வெற்றிலை பாக்கு முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது'' என்கிறார் ராஜ்குமார் பழனியப்பன்.